# என்னைக் காண்கிற தேவன்

**அப்பொழுது அவள்: என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு நீர் என்னைக் காண்கிற தேவன் என்று பேரிட்டாள். (ஆதி 16:13)**




மேற்கண்ட வசனத்தில் எகிப்து தேசத்து அடிமை பெண்ணாகிய ஆகார், கர்த்தராகிய தேவனுக்கு இப்படிப்பட்ட ஒரு பெயரை தன் அனுபவத்தின் மூலம் கூறினாள். ஆபிரகாமின் வித்தாகிய இஸ்மவேலை தன் வயிற்றில் சுமந்தவளாய், ஆபிரகாமுக்கு தெரியாமல், சாராளின் கடினமான நடத்துதல் நிமித்தம், அவ்விடம் விட்டு வெளியேறி வனாந்தரத்தில் அலைந்த ஆகாரை கர்த்தர் கண்டார் **(ஆதி 16:7)**. இதற்கு காரணம் என்னவென்பதை இதற்கு முந்தைய வசனங்கள் நமக்கு தெளிவாக கூறுகின்றன. **"அவன் ஆகாரோடே சேர்ந்தபோது, அவள் கர்ப்பந்தரித்தாள்; அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டபோது, தன் நாச்சியாரை அற்பமாக எண்ணினாள். அப்பொழுது சாராய் ஆபிராமை நோக்கி: எனக்கு நேரிட்ட அநியாயம் உமதுமேல் சுமரும்; என் அடிமைப்பெண்ணை உம்முடைய மடியிலே கொடுத்தேன்; அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டு என்னை அற்பமாக எண்ணுகிறாள்; கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயந்தீர்ப்பாராக என்றாள். அதற்கு ஆபிராம் சாராயை நோக்கி: இதோ, உன் அடிமைப்பெண் உன் கைக்குள் இருக்கிறாள்; உன் பார்வைக்கு நலமானபடி அவளுக்குச் செய் என்றான். அப்பொழுது சாராய் அவளைக் கடினமாய்**

**நடத்தினபடியால் அவள் அவளைவிட்டு ஓடிப்போனாள் (ஆதி 16:4-6)"**. இங்கு இந்த பிரச்சனைக்கு எல்லாம் மூலக்காரணம், தன் நாச்சியாரை அற்பமாக எண்ணியதாகும். அடிமைப் பெண்ணாகிய தனக்கு இப்படிப்பட்ட அந்தஸ்தைத் தந்த தன் எஜமாட்டியை அவள் அற்பமாக எண்ணினாள். அதே நேரத்தில் சாராளுக்கு ஆகாரின் வயிற்றில் வளர்வது ஆபிரகாமின் வித்து என்று தெரிந்திருந்தும், அவளை கடினமாய் நடத்தினாள். ஆபிரகாமோ, இதை எதையும் கண்டுகொள்ளாமல் உன் அடிமைப்பெண் உன் கைக்குள் இருக்கிறாள், உன் பார்வைக்கு நலமானபடி அவளுக்கு செய் என்று கூறிவிட்டார் **(ஆதி 16:6)**.

மனிதர்கள் தேவ சித்தத்தை, திட்டத்தை உணராமல் வாழ்வில் செய்யும் தவறுகள் பல விதங்களில், பலருக்கு, பல்வேறு வேதனையான அனுபவங்களைக் கொண்டு வருகிறது. இதற்கு ஆபிரகாம், சாராள், ஆகார் ஆகிய மூவரும் சரியான உதாரணங்களாவர். ஆனால் இவை எல்லாவற்றையும் சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவன் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். அவருக்கு தெரியும் எப்பொழுது, எது எப்படி நடைபெற வேண்டும் என்பது. எனவே தற்போது ஆபிரகாமை விட்டு செல்வது அவருடைய திட்டம் அல்ல என்பதனால், அவளுடன் இடைப்பட்டு, அவளை மறுபடியும் சாராளிடத்திற்குச் செல்லும்படி கூறினார். **"அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர்: நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப்போய், அவள் கையின்கீழ் அடங்கியிரு என்றார். பின்னும் கர்த்தருடைய தூதனானவர் அவளை நோக்கி: உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்; அது பெருகி, எண்ணிமுடியாததாயிருக்கும் என்றார். பின்னும் கர்த்தருடைய தூதனானவர் அவளை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கிறாய், ஒரு குமாரனைப் பெறுவாய்; கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியினால், அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுவாயாக (ஆதி 16:9-11)"**. மேலும் இங்கு நாம் காணும் முக்கியமான சத்தியம் என்னவென்றால், **நீர் என்னைக் காண்கிற தேவன் (ஆதி 16:13)** என்பதை ஆகார் உணர்ந்து கொண்டதுதான். ஒருவேளை அவள் அன்று ஆண்டவருக்கு கீழ்படியாது இருந்திருப்பாளானால், இன்று பூமியில் இஸ்மவேலின் சந்ததியே இருந்திருக்காது. இங்கு என்னை காண்கிற தேவன் என்ற வார்த்தையானது அவர் நம்மை இப்பொழுது இக்கட்டான சூழலில் காண்கிறார் என்று பொருள் மாத்திரமல்ல, அவர் நம்மை எப்பொழுதும் காண்கிறவராய் இருக்கிறார், நம்முடைய கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் என சகலவற்றையும் காண்கிற தேவன் இருக்கிறார் என்பதே அதன் அர்த்தம்.

அதனால்தான் அவள் வயிற்றில் வளரும் பிள்ளையின் பெயர் முதற்கொண்டு, அவன் சந்ததியாரின் வாழ்க்கை வரை நடக்க இருக்கும் அனைத்தையும் அவர் காண்கிறபடியால், அதை அவளுக்கு வெளிப்படையாகவே அறிவித்து, இப்படிப்பட்ட திட்டத்தில் இருக்கும் பிள்ளையை பாதுகாப்பாய் பெற்றெடுத்து வளர்க்க அவளிடம் கூறினார். ஆம் ஆண்டவர் தன்னுடைய வாழ்க்கையை மட்டுமல்ல தன் சந்ததியின் வாழ்க்கையையும் தம் சித்தப்படி, திட்டப்படி நடத்துகிறார் என்பதை உணர்ந்து கொண்டதால், அதனாலேயே நீர் என்னைக் காண்கிற தேவன் என்றாள். அதற்கு காரணம் என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் என்று கூறுகிறாள். ஆம் நம் வாழ்வை மட்டுமல்ல நம் சந்ததிகளின் வாழ்வையும் பொறுப்பெடுத்து நடத்துகிறவர் நம் தேவன். நாம் இன்று ஆண்டவரோடு இருக்கிறோம் என்றால், அதை நாம் நம் தாயின் கருவில் உருவாவதற்கு முன்பே அவர் முன் குறித்து விட்டார். எனவே நம் முன்னோர்களின் வாழ்க்கை மட்டுமல்ல நம் வாழ்க்கையையும், நம் சந்ததிகளின் வாழ்க்கையையும், அவர் அறிந்திருக்கிறார். எனவே அவர் நம்மை காண்கிற தேவன் என்ற சத்தியத்தை நாம் அறிந்திருக்கிறபடியால் நம்முடைய நிலைமை முற்காலத்தில் எப்படி இருந்திருந்தாலும், தற்கால நிலைமை அதைக்காட்டிலும் மோசமாக இருந்தாலும், முக்காலத்தையும் காண்பவர் மட்டுமல்ல, அதை ஆண்டு நடத்துகிற அவருக்கு கீழ்ப்படிந்து, என்னை காண்பவரை, நானும் கண்டேன் என்று சொல்லி ஆண்டவருக்கு கீழ்ப்படிவோமானால், அதற்கான நன்மையை ஆண்டவர் நிச்சயம் நமக்கு தருவார்.

மேலும் ஆகாரிடம் ஆண்டவர் இஸ்மவேலின் வாழ்க்கை பற்றி கூறியது போல, நம் பிள்ளைகளின் வாழ்க்கையும், அவரது கரத்திலே இருக்கிறது என்பதை நாம் உணர்வோமானால், நம் பிள்ளைகளைப் பற்றி நாம் கவலை கொள்ளமாட்டோம். நம்மால் நம் பிள்ளைகளை அருகில் இருந்து கவனித்துக் கொள்ள முடியாத சூழலில் இருந்தாலும், எல்லாவற்றையும் முன்குறித்த தேவன், நம் பிள்ளைகளின் குறித்த திட்டத்தையும் நிச்சயம் செய்து முடிப்பார். ஏறக்குறைய 14 வருடங்களுக்கு பிறகு தேவ சித்தப்படி ஆபிரகாமின் மூலமாகவே அனுப்பி விடப்பட்ட போது, அதே பிள்ளையை தன் கையில் பிடித்தவளாய் மறுபடியும் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள். **"அப்பொழுது தேவன் ஆபிரகாமை நோக்கி: அந்தப் பிள்ளையையும், உன் அடிமைப்பெண்ணையும் குறித்துச் சொல்லப்பட்டது உனக்குத் துக்கமாயிருக்க வேண்டாம்; ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்; ஆதலால் சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள். அடிமைப்பெண்ணின் மகனும் உன் வித்தாயிருக்கிறபடியால், அவனையும் ஒரு ஜாதியாக்குவேன் என்றார். ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, அப்பத்தையும் ஒரு துருத்தி தண்ணீரையும் எடுத்து, ஆகாருடைய தோளின்மேல் வைத்துப் பிள்ளையையும் ஒப்புக்கொடுத்து, அவளை அனுப்பிவிட்டான்; அவள் புறப்பட்டுப்போய், பெயெர்செபாவின் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள். (ஆதி 21:12-14)"**. குடிக்க தண்ணீர் இல்லாமல், பிள்ளை சாகிறதை நான் காண மாட்டேன் என்று கூறி சத்தமிட்டு அழுத வேளையில், அன்று ஆகாரை கண்ட தேவன், இன்று அவள் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார். **"துருத்தியிலிருந்த தண்ணீர் செலவழிந்தபின்பு, அவள் பிள்ளையை ஒரு செடியின்கீழே விட்டு, பிள்ளை சாகிறதை நான் பார்க்கமாட்டேன் என்று, எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுதாள். தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார்; தேவதூதன் வானத்திலிருந்து ஆகாரைக் கூப்பிட்டு: ஆகாரே, உனக்கு என்ன சம்பவித்தது, பயப்படாதே, பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன் அவன் சத்தத்தைக் கேட்டார். (ஆதி 21:15-17)"**. அவ்வனாந்தரத்திலே தண்ணீர்துரவை காண செய்து அவளின் பிள்ளையை காப்பாற்றினார் **(ஆதி 21:19)**. ஆம் எத்தனை காலம் ஆனாலும் ஆண்டவர் நம்மை காண்கிற, நம் கூப்பிடுதலை கேட்கிறவராய் இருக்கிறார்.

நம்மை எல்லாரும் கை விட்டாலும் அல்லது உதவி செய்ய முடியாத சூழலில் இருந்தாலும், ஏன் நம்மாலேயே நம் பிள்ளைகளுக்கு உதவ முடியாத சூழ்நிலையில் இருந்தாலும், ஆண்டவர் நம்மை காண்கிற தேவனாக இருக்கிறார். ஒருவேளை வாழ்க்கை சூழ்நிலையினால், பெற்றோர் பிள்ளைகளை அருகில் இருந்து பராமரிக்க முடியாமல் வெவ்வேறு இடத்தில் வாழலாம், அல்லது சிறிது காலம் பிரிந்து இருக்கலாம், ஆனால் அவ்வேளையிலும் அவர் நம் பிள்ளைகளை பொறுப்பெடுத்துக் கொள்வார். அவர்களுடைய தற்கால வாழ்க்கை மாத்திரமல்ல, அவர்களுடைய சந்ததியையும் தேவன் பொறுப்பெடுத்துக் கொள்வார். **"தேவன் பிள்ளையுடனே இருந்தார்; அவன் வளர்ந்து வனாந்தரத்திலே குடியிருந்து, வில்வித்தையிலே வல்லவனானான். அவன் பாரான் வனாந்தரத்திலே குடியிருக்கையில், அவனுடைய தாய் எகிப்து தேசத்தாளாகிய ஒரு பெண்ணை அவனுக்கு விவாகம்பண்ணுவித்தாள். (ஆதி 21:20,21)"**. ஆம் அவன் வளர்ந்தது வனாந்தரத்திலே, குடியிருந்தது வனாந்தரத்திலே, ஆகார் எகிப்திலிருந்து வந்தபடியால் எகிப்து தேசத்து பெண்ணையே அவனுக்கு திருமணம் செய்து முடித்தாள். இன்று இஸ்மவேலின் சந்ததியார், ஆண்டவர் கூறியபடியே எண்ணி முடியாதவர்களாய் அதே வனாந்திர தேசத்தில் செல்வ செழிப்போடு வாழ்வது உலகறிந்த உண்மை. அன்று தன்னைக் கண்ட ஆண்டவரை கண்டு, உணர்ந்து நீர் என்னைக் காண்கிற தேவன் என்று அறிக்கையிட்டபடியால் இன்றளவும் ஆபிரகாமின் வித்தாகிய அவளுடைய சந்ததியார் பூமியெங்கும் பரம்பி வாழ்கின்றனர். அன்று ஆகாரை கண்ட தேவன், இன்று நம்மையும் காண்கிறார் என்பதை உணர்ந்து அறிக்கையிடுவோமானால், நம் சந்ததியார் பூமியில் மாத்திரமல்ல, நித்தியத்திலும் கிறிஸ்துவின் சந்ததியாராய் என்றென்றும் வாழ்வர். ஆண்டவர் தாமே

அப்படிப்பட்ட கிருபையை நமக்கும், நம் பிள்ளைகளுக்கும் தருவாராக. ஆமென், அல்லேலூயா.